தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை-06
ந.க.எண்.000987/எம்1/இ1/2026 நாள்:09.06.2026

பொருள் : பள்ளிக்கல்வி – 2026- 2027 ஆம் கல்வியாண்டு தொடக்கத்தில் மாணவர்களுக்கு பள்ளிகளில் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு வழங்குதல்-மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குதல் – சார்பு

பார்வை : அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் , தலைமைச் செயலகம் , அவர்களின் கடித. எண்.15670/H,P&E(xvl)/2026-2, நாள்;03.06.2026

*****

தமிழ்நாடு 2026-2027 ஆம் கல்வியாண்டு அனைத்து வகை பள்ளிகளிலும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும், ஏற்கனவே மாவட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சியானது உள்துறை மூலம் வழங்கப்பட்டு அவர்கள் மூலமாக பள்ளி போதைப் பொருள் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர்களுக்கும் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பயிற்சி நடத்திமுடிக்கப்பட்டது. தற்போது பள்ளி போதைப் பொருள் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர்களை கொண்டு சார்ந்த பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திடவும் இப்பொருள் சார்ந்து மாவட்ட ஆட்சியரிடமும் கலந்தாலோசித்து செயல்படுத்திடவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

மேலும் இந்நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை , காவல்துறை மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களை ஒருங்கிணைத்து இம்மாத இறுதிக்குள் நடத்திமுடித்திடவும், இணைப்பில் கண்டுள்ள இணையவழி பூர்த்தி படிவத்தை பள்ளி போதைப் பொருள் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர்களை கொண்டு பூர்த்தி செய்திடவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

இணைப்பு : பயிற்சி கையேடு மின்நகல் & இணையவழி பூர்த்தி படிவம்.

இயக்குநர் 9/6
சி.ஜெ
09.06.26

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

நகல்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09 (தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது)

2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
உள்துறை ,மதுவிலக்கு மற்றும் கலால்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-09 (தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது)